## இன்று – அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள்

# ரூ.332.60 கோடியில் நல உதவிகள்! எம்.சி.இராஜா கல்லூரி புதிய விடுதிக் கட்டடம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

**சென்னை, ஏப். 14 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று ( 14.4.2025) அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை திறந்து வைக்க உள்ளார்.**

அதனைத் தொடர்ந்து, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், முதலமைச்சர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். பின்னர், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற்கப்பட உள்ளது.

தொடர்ந்து, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ள சமத்துவ நாள் விழாவில், முதலமைச்சர் அவர்கள், 227 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கான 18 விடுதிக் கட்டடங்கள், 46 பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, 19 சமுதாய நலக்கூடங்கள், 22 கல்லூரி விடுதிகளில் கற்றல் கற்பித்தல் கூடம் மற்றும் 1000 பழங்குடியினர் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைக்கவுள்ளார்.

**நலத்திட்ட உதவிகள்!**

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 48,436 பயனாளிகளுக்கு 104 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கவுள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ள சமத்துவ நாள் விழாவில் மொத்தம் 49,542 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 332 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியும், கட்டடங்களை திறந்து வைத்தும், முதலமைச்சர் அவர்கள் சிறப்பிக்க உள்ளார்.

சமத்துவ நாள் விழாவில், முதலமைச்சர் அவர்கள் தமிழாக்கம் செய்யப்பட்ட அண்ணல் அம்பேத்கர் அவர்களின் இரண்டு நூல்களையும், வன உரிமைச் சட்டத்திற்கான வரைபடத்தையும் வெளியிட உள்ளார்.

இவ்விழாவில், பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாளையொட்டி அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இதே போன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

---

## நகராட்சி நிர்வாகத் துறையில் முறைகேடா?

# அமலாக்கத்துறை வழக்கினை சட்ட நடவடிக்கை மூலம் முறியடிப்போம்!

## கழக சட்டத் துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அறிக்கை!

**சென்னை, ஏப். 14 -**

**"நகராட்சித் துறையில் முறைகேடு நடந்துள்ளதாக கூறி அமலாக்கத் துறை தொடர்ந்துள்ள வழக்கினை சட்ட நடவடிக்கைகள் மூலம் முறியடிப்போம்" என்று கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



பாரதிய ஜனதா கட்சியை கொள்கைரீதியாக தொடர்ந்து வலுவாக எதிர்க்கும் கட்சிகளையும், மாநில அரசுகளையும் பழிவாங்குவதற்காக, ஒன்றிய அமைப்புகளை ஆயுதங்களாக பயன்படுத்தும் ஒன்றிய அரசின் மேலும் ஒரு நடவடிக்கையாக, பத்து ஆண்டுகளுக்கு முந்தைய வங்கிக் கடன் வழக்கை தூசுதட்டி எடுத்து, எவ்வித ஆதாரமின்றி தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாக துறை பற்றிய பல தவறான தகவல்களை அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

**கதை கட்டியுள்ளது!**

சென்னையில் மேற்கொள்ளப்பட்ட அமலாக்கத் துறை நடவடிக்கையானது, ஒரு தனியார் நிறுவனம் வாங்கிய வங்கிக்கடன் பற்றியதாகும். இந்த கடன் தொகை முழுவதும் வட்டியோடு திருப்பி செலுத்தப்பட்டுள்ள நிலையில், இதில் எந்த விதமான முறைகேடும் இல்லை. மேலும், இந்த வழக்கை சிபிஐ அமைப்பு விசாரிப்பதற்கு, முதல் நோக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்கனவே தடை விதித்துள்ளது குறிப்பிடத் தக்கது. இந்த அமலாக்கத்துறை விசாரணையிலும் எள்ளளவு ஆதாரமும் கிடைக்காத ஏமாற்றத்தில், எந்த முகாந்திரமும் இன்றி, நகராட்சி நிர்வாகத்துறையில் பல முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், சட்டத்திற்கு புறம்பான பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இத்துறை கதைகட்டியுள்ளது.

நகராட்சி நிர்வாகத் துறையின் நடவடிக்கைகள் தொடர்பாக, எவ்வித முதல் தகவல் அறிக்கையோ, குற்றப்பத்திரிக்கையோ, வழக்கோ நிலுவையில் இல்லாத போது, இந்தத் துறை பற்றி விசாரணை செய்வதற்கு அமலாக்கத்துறைக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை. இந்த நிலையில், புதிதாக சேர்ந்துள்ள கூட்டணிக் கட்சியை திருப்திப்படுத்துவதற்காக, ஆதாரமற்ற இத்தகைய குற்றச்சாட்டுகளை அமலாக்கத் துறை முன்வைத்துள்ளது கடும் கண்டனத்துக்குரியது.

அரசியல் உள்நோக்கத்தோடு, சட்டத்திற்கு புறம்பான இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஆதாரங்களின்றி, ஊழல் நடப்பதாக பொத்தாம் பொதுவாக அறிக்கை விடுவது அமலாக்கத்துறைக்கு ஒரு வாடிக்கையாகவே ஆகிவிட்டது. சட்டபூர்வாக செயல்பட வேண்டிய அமலாக்கத் துறையானது, ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக இப்படி அரசியல் அறிக்கைகளை வெளியிடுவது அத்துறைக்கு அழகும் அல்ல, சட்டப்படி ஏற்கத்தக்கதும் அல்ல. இத்தகைய அரசியல்ரீதியான பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் தேவைப்படும் சட்ட நடவடிக்கைகள் மூலமாக எதிர்கொண்டு முறியடிப்போம்..

இவ்வாறு என்.ஆர். இளங்கோ தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## நீண்ட காலப் பொது வாழ்க்கையில் தடுமாற்றம் ஏற்பட்டது குறித்து வருந்துகிறேன்!

# தகாத கருத்தைப் பேசியதற்கு மனப்பூர்வமான மன்னிப்பு கோருகிறேன்!

## அமைச்சர் க.பொன்முடி அறிக்கை!

சென்னை, ஏப். 14 -



கழக முன்னாள் துணைப் பொதுச்செயலாளரும் அமைச்சருமான க.பொன்முடி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய ஒரு உள் அரங்கக் கூட்டத்தில், தகாத பொருளில் தவறான சொற்களைப் பயன்படுத்தி நான் பேசிய பேச்சுக்கு மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தகாத கருத்தை நான் பேசியது குறித்து உடனடியாக மனப்பூர்வமாக வருந்தினேன். நீண்ட காலம் பொது வாழ்க்கையில் உள்ள எனக்கு இதுபோன்ற தடுமாற்றம் ஏற்பட்டது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். பலருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் இப்பேச்சு அமைந்து விட்டது குறித்தும், அவர்கள் தலைகுனியும் சூழல் ஏற்பட்டது குறித்தும் நான் மிகவும் மனம் வருந்துகிறேன்.

மனம் புண்பட்ட அனைவரிடமும் நான் பேசிய பேச்சுக்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி, தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலில், கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்ற தொகுதி கழக இளைஞர் அணி சார்பில், இந்தித் திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், மக்களவை தொகுதிகள் சீரமைப்பில் அநீதி இழைத்திடும் ஒன்றிய அரசை கண்டித்து, மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம், தோகைமலை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், தலைமை கழக இளம் பேச்சாளர் குணஸ்ரீ பேசினர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கமேடு சக்திவேல் தலைமையில், தோகமலை மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சு.கோபால் வரவேற்புரையில், குளித்தலை தொகுதி எம்எல்ஏ இரா. மாணிக்கம், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ க. சிவகாமசுந்தரி, மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் முன்னிலையில் குளித்தலை கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ர.பிரகாஷ் நன்றியுரையில் நடைபெற்றக் இக்கூட்டத்தில் வெள்ளம் போல் திரண்டிருந்தனர்.

---

# எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா - பா.ஜ.க.!

**கேள்வி:** "மாமனிதர் எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் தொலைநோக்குப் பார்வையைச் செயல்படுத்தும் ஓர் அரசை உறுதி செய்வோம்" என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளாரே ?

**பதில்:** எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், 1980ல் தோன்றிய பா.ஜ.க.வுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

1998 நாடாளுமன்றத் தேர்தலில்தான் முதல் முறையாக ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமைந்து, 3 ஆண்டுகளுக்குள்ளாகவே அந்தக் கூட்டணி முறிந்தது. பிறகு ஜெயலலிதா உயிரோடு இருந்தவரை பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ளவில்லை.

பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து, பெரிய தவறு செய்துவிட்டதாகவும், அந்தத் தவறுக்குப் பரிகாரமாகவே பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்ததாகவும், இனி எந்தக் காலத்திலும், பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாது - என்றும், 1999 நாடாளு மன்றத் தேர்தலின்போது, தமிழ்நாட்டு மக்களுக்கு உத்தரவாதம் அளித்துப் பேசினார் ஜெயலலிதா.

அவர் இவ்வாறு பேசிய அந்த வீடியோ, இப்போது வைரலாகிக் கொண்டிருக்கிறது.

**பா.ஜ.க.வுடன் இனி எப்போதும் தொடர்பில்லை என்ற ஜெயலலிதாவின் வைராக்கியத்தை மறைத்துவிட்டோ அல்லது மறந்துவிட்டோதான், பிரதமர் மோடி இப்படிக் குறிப்பிட்டுள்ளது பெரும் நகைமுரணாக இருக்கின்றது.**

**அதைப்போலவே, தமிழ்நாட்டின் மீது தாம் கொண்டுள்ள ஆழமான வெறுப்பை மறைப்பதற்காகவே, - தமிழ்மொழியின் அருமையைப் பற்றியும், தமிழனாகப் பிறக்கவில்லையே என ஆதங்கப்படுவதாகவும் - மோடி அவர்கள் பேசியதையும் தமிழ்நாட்டு மக்கள் பொருட்படுத்தவில்லை !**

**தொலைநோக்குப் பார்வை; செயல்படுத்தும் அரசு - என்று பிரதமர் சொல்வதெல்லாம் வெறும் 'ஜூம்லா'க்கள்தான் என்பதை அனைவரும் அறிவர்.**

---

## ஆ.இராசா எம்.பி. திறந்து வைத்தார்!

# பெரம்பலூரில் தண்ணீர் பந்தல்!

## வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*பெரம்பலூர், ஏப். 14 -*

பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பாலக்கரையில் அமைக்கப்பட்டிருந்த கோடைகால நீர், மோர், தண்ணீர் பந்தலை, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., திறந்து வைத்து, தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன்,

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா. பிரபாகரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தி.இராசா, பொறியாளர் அணி மாவட்ட தலைவர் பி.எஸ்.வேல்முருகன், மாவட்டதுணைத்தலைவர் பி.செல்லச்சாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.பெரியசாமி, ஜி.கே. மூர்த்தி, ஆர்.ரவிச்சந்திரன், ஆர்.ராஜாராம், ஜி.ராஜசேகர்,

மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்துச்செல்வன்,

மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்ட திமுக, சிங்காநல்லூர் 56 வது வார்டுக்கு உட்பட்ட BLA2 பாகமுகவர்கள் கூட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு பேசினார். முத்துவேல் ராமசாமி, த.சுரேஷ்குமார், ன்.டி.சின்னச்சாமி, கனகராஜ், தேவராஜ், க.மணிகண்டன், ராஜேந்திரன், சதீஷ்குமார், பாலதண்டாயுதம், வணங்காமுடி, கு.கனகராஜ், கே.ராஜேஸ்வரி, வி.கமலக்கண்ணன், பி.முருகேஷ், பி.சிவகாமி, கார்த்திகேயன், ஏ.ஆறுமுகம், எம்.முருகேஷ், டி.கலாமணி, டேவிட் வில்சன், சி.பார்த்திபன், கே.தனமணி, எஸ்.சண்முகம், மு.கர்ணன் உள்பட மற்றும் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.